‘தி. மு. கழகம் முல்லைக் கொடி!’

REGD. No M. 6311 PHONE No. 55630

நம் நாடு

தி.மு.க.தின இதழ் ஆசிரியர்..அண்ணாதுரை

The “Nam Nadu”: A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F

தனி இதழ்: ஒரு அணா | சென்னை: ஆனியீ 14உ திங்கள் (28—6—54) | மலர்: 2
இலங்கையில் 10 சதம் | வெளியூர்: ஆனியீ 15உ செவ்வாய் (29—6—54) | இதழ்: 12

வேலூரில் விடுதலை முழக்கம்!

—(:)—

பல்லாயிரவர் திரண்டிருந்த கண்கொள்ளாக் காட்சி!

—:0:—

கழகத் தோழர்கள் களிப்புக் கடலில்!

வ. ஆ. மாவட்ட தி. மு. கழக 2-வது மாநாட்டு நிகழ்ச்சிகள்

வட ஆர்க்காடு மாவட்ட தி. மு. கழக 2-வது சமூக சீர்திருத்த, அரசியல் மாநாடுகள் ஜூன் 26, 27 ஆகிய இரு நாட்களிலும் வேலூர் டவுன் ஸ்டேஷன் அருகில் அழகுற அமைந்திருந்த அழகிரி பந்தலில்—முத்து அரங்கில் சீரும் சிறப்புடனும் நடைபெற்றது.

மாநாட்டிற்காக, ஊர் முழுவதும் கழகக் கொடிகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தது.

வழிதோறும் ‘வரவேற்பு வளைவுகள்’ கொடித் தோரணங்கள் கண் கவர்ந்தன.

மாநாட்டின் முகப்பில் மாவீரன் அழகிரியின் ஓவியம் காட்சி தந்தது.

மாநாட்டுப் பந்தல் அழகுற அமைந்திருந்தது.

ஒலி, ஒளி ஏற்பாடுகள் வெகு விமரிசையாய் அமைந்திருந்தன.

மொத்தத்தில், மாநாடு வழக்கம்போல, வெகு சிறப்புடனும் அமைந்திருந்தது.

தி. மு. கழகத்தின் எந்த மாநாடுதான், சிறப்பற்று இருந்தது? நமது மாநாடுகள் என்றாலே, அது சிறப்பாய்த்தானே இருக்க வேண்டும்—இருக்கின்றது. அதிலிருந்து வேலூர் மட்டும் வேறுபட்டு விதிவிலக்காகவா இருக்கும்?

வரவேற்புக் குழுத் தலைவர்கள் எம். பி. சாரதி, எம். சி, ஏ. எல் சி கிருட்டிணசாமி, செயலாளர்கள் யோனுர் கே. சுப்பிரமணியம், வி. ஆர். ஆதிமூலம், விளம்பர உறுப்பினர் சிவானந்தம், பொருளாளர் வி. என். அரங்கநாதன், அலுவலகப் பொறுப்பாளர் ஆர் இராதாகிருட்டிணன், தொண்டர் படைத் தலைவர்கள் அ. கருத்தோவியன், என். குப்புசாமி ஆகியவர்களின் தளரா உழைப்பினும், தோழர்கள் வி. எம். தேவராஜ் எம். சி, வி. என். கார்த்தம், சிவப்பிரகாசம், வி. பி. ஏகாம்பரம், உமாபதி, நரசிம்மன் ஆகியவர்களுடைய மனமுவந்த ஒத்துழைப்பினும், பொது மக்களுடைய ஆதரவினும் வட ஆர்க்காடு மாவட்ட தி. மு. கழக 2-வது சமூக சீர்திருத்த அரசியல் மாநாடுகள் இரண்டு நாட்களிலும் வெற்றிகரமாக நடந்து முடிவுற்றன.

அவர்கள் எல்லாம் பொதுச் செயலாளராலும், பொதுமக்களாலும் வெகுவாகப் பாராட்டப் பட்டனர்.

அரசியல் மாநாடு

27—6—54 ஞாயிறு காலை 10 மணிக்கு அரசியல் மாநாடு, “விடுதலைக் கொடி பறக்குது பாரீர்” என்ற அனீபாவின் இசை முரசு ஒலிக்க, அதிர் வேட்டுகள் முழங்க, ஆர்வமிக்க தோழர்களின் ஆரவாரம் வானைமுட்ட, தொண்டர் படை அணிவகுத்து நிற்க, மாநாட்டுத் தலைவர் தோழர் மதியழகன் அவர்களால் தி. மு. கழகக் கொடி ஏற்றி வைக்கப்பட்டுத் துவங்கியது.

சமூக சீர்திருத்த மாநாடு

26—6—54 சனியன்று காலை 9-30 மணி அளவில் “அழைக்கின்றார் அழைக்கின்றார் அண்ணா நம் அருமை திராவிடத்தை ஆக்கிடத்தான அழைக்கின்றார் “அண்ணா” என்ற இசை முரசு நாகூர் அனீபாவின் இசை அழைப்போடு மாநாடு துவங்கிற்று.

சமூக சீர்திருத்த மாநாட்டை தோழர் இரா. நெடுஞ்செழியன் துவக்கி வைத்தார்.

வட ஆர்க்காடு மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் தோழர் ஏ. எல். சி. கிருட்டிணசாமி அனைவரையும் வரவேற்று மாநாட்டிற்கு தோழர் ஈழத்தடிகள் அவர்களைத் தலைமை தாங்குமாறு முன்மொழிந்தார்.

வழிமொழிந்து தோழர்கள் அ. பொன்னம்பலனார், வடிவேல், என். வி. நடராசன் ஆகியோர் பேசினர்.

பின்னர், ஈழத்தடிகள் தனது தலைமை உரையை ஆற்றத் தொடங்கினார். அவரது உடல்நிலை பாதிக்கப்பட்டிருந்தமையால், அவர் தயாரித்திருந்த தலைமை உரையை தோழர் க. அன்பழகன் தொடர்ந்து வாசித்தார்.

பின்னர் மாலை 3-30 மணியளவிற்கு மீண்டும் அனீபா குழுவினரின் இன்னிசையுடன் மாநாடு துவங்கிற்று.

ஆம்பூர் சீனிவாசன், தோழியர் அலமேலு ஆகியோரும் இசை வழங்கினர்.

தோழர் அ. பொன்னம்பலனார் அவர்கள் ‘புராணமும் இந்து மதமும்’, தோழர் சி. பி. சிற்றரசு ‘சாக்ரடீஸ்’ தோழர் இரெ. இளம்வழுதி ‘சட்டமும் சமுதாயமும்’, தோழர் என். வி. நடராசன் ‘அன்றும் இன்றும்’, நடிகர் எம். ஜி. ராமச்சந்திரன் ‘கலையும் வாழ்வும்’, தோழர் அன்பழகன் ‘மாஜி கடவுள்கள்’, என்ற பல்வேறு தலைப்புகளில் சொற்பொழிவுகள் நடைபெற்றதும் தலைவர் முடிவுரையுடன் மாநாடு முடிவுற்றது. இரவு 10½ மணிக்கு ராசேந்திரன் நாடக மன்றத்தாரால் தோழர் கருணாநிதியின் ‘அம்மையப்பன்’ என்ற நாடகம் நடித்துக் காட்டப்பட்டது.

தோழர் நாஞ்சில் மனோகரன் மாநாட்டினைத் திறந்து வைத்துச் சொற்பொழிவாற்றினார்.

அடுத்து, வரவேற்புக் குழுத் தலைவரும் நகரசபை உறுப்பினருமான தோழர் ம. பா. சாரதி அவர்கள் எல்லோரையும் வரவேற்று, உரை நிகழ்த்தி, தோழர் மதியழகனை மாநாட்டிற்குத் தலைமை தாங்க, வரவேற்புக் குழு சார்பில் வேண்டிக்கொண்டார்.

அதை வழிமொழிந்து தோழர்கள் தில்லை வில்லாளன், சி. வி. இராசகோபால், தோழியர் பூங்கோதை தோழர்கள் அறிவழகன், தங்கப்பழம், ப. உ. சண்முகம் ஆகியோர் பேசினர்.

பின்னர் தோழர் கே. ஏ. மதியழகன் தலைமை ஏற்று உரை நிகழ்த்தியதும், மாநாடு இடைவேளைக்காகக் கலைந்தது.

மாலை 4 மணிக்கு மீண்டும் ஆம்பூர் சீனிவாசன், நாகூர் அனீபா ஆகியோர் இசை விருந்துடன் மாநாடு துவங்கிற்று.

நாட்டு நிலை குறித்தும், வ. ஆ. மாவட்ட முன்னேற்றத்திற்காகவும், பல்வேறு வகைப்பட்ட 25 தீர்மானங்கள் கழக முன்னணி வீரர்களால் முன்மொழியப்பட்டும், வழி மொழியப்பட்

(4-ம் பக்கம் பார்க்க)

‘மற்றக் கட்சிகள் பனை மரம்’

‘முல்லை தரும் மணத்தில் மயங்கி நாகப் பாம்பும் கொடிக்காலில் நுழையக்கூடும்’

‘தாக்குபவர்களே! தடி கொண்டு எங்களைத் தாக்குங்கள்! சரிவரத் தூற்றுங்கள்!!’

‘தாக்குதலுக்கும் தூற்றுதலுக்கும் நாம் அஞ்சக்கூடாது’

வேலூரில் அண்ணா முழக்கம்

வ. ஆ. மாவட்ட தி. மு. கழக மாநாடு இன்றும், நேற்றும் சிறப்புற வேலூரில் நடைபெற்றுள்ளது. மாநாடு வெற்றிகரமாக நடக்க உதவிய எல்லா நண்பர்களுக்கும், மாநாட்டை சீருடன் நடத்தியுள்ள வ. ஆ. மாவட்ட தி.மு. கழகத் தோழர்களுக்கும், வரவேற்புக் குழுவினருக்கும் தலைமைக் கழகத்தின் சார்பில் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

எனக்குத் தெரியும் இந்த மாநாடு எத்தனை இன்னல்களுக்கிடையில் நடத்தப்படுகிறது என்பது! மாநாடு நகரின் மத்தியில் உள்ள கோட்டை வெளி மைதானத்தில் நடைபெறுவதாக இருந்தது; ஆனால், சர்க்கார் இடமான கோட்டை வெளி மைதானம் மாநாடு நடத்துவதற்குத் தரப்படவில்லை—காரணம் அதிகமாகக் காட்டாமலேயே மறுத்துவிட்டார்கள். அதனால் நகருக்கு சற்று ஒதுக்கியுள்ள இந்த இடத்தில் வறளும் வரப்புமாயிருந்த தரிசு நிலத்தைப் பண்படுத்தி, பந்தல் எழுப்பி, பலரும் வியக்கத்தக்க முறையில் விமரிசையாக மாநாடுகள் நடைபெற்றுள்ளன.

நேற்று நடைபெற்ற சமூக சீர்திருத்த மாநாட்டிலும், இன்றைய அரசியல் மாநாட்டிலும் விரிவாகப் பேசப்பட்ட எல்லா விஷயங்களையும் கழகத் தோழர்கள் தங்கள் தங்கள் ஊர்களுக்கு—பட்டி தொட்டிகளுக்குச் சென்றதும், ஆங்காங்குள்ள மக்களுக்கு — சந்தேகம் கேட்பவர்களுக்கு விளக்கம் தந்து, ஆதாரம் கேட்பவர்களுக்கு, புள்ளி விவரங்களையும் தந்து அவர்கள் உள்ளத்தில் எல்லாம் நமது கொள்கைகளும் இலட்சியமும் இடம்பெறச் செய்ய வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன்.

இந்த இரண்டு நாட்களிலும் இங்கு நடைபெற்றுள்ள மாநாடுகள் மாற்றாருக்கு ஆச்சரியத்தைத் தருகின்றன. கோட்டை வெளி தங்களுக்குச் சொந்தம் என்றெண்ணியிருந்த காங்கிரசாருக்கு மாற்றம் தட்டும் வலிவு கொஞ்சம் குறைந்துள்ளது—இந்த மாநாடுகள் வேலூரில் நடைபெற்றிருப்பதால்!

தேசியக் கோட்டை எனப் படும் வேலூர், இன்று, தி. மு. கழகம் பாசறையாய்க் காட்சியளிக்கிறதே! — எப்படி ஏற்பட்டது நமக்கு இந்த வலிவும் வளப்பும்!

சர்க்காரானாலும் சரி, அந்தச் சர்க்காரைக் கைப்பற்ற முயற்சித்துக் கொண்டிருக்கும் கம்யூனிஸ்டானாலும் சரி, ‘அவர்கள் ஏமாறுவார்களா? எதிர்கால ஆட்சி பீடம்,’ என எண்ணிக்கொண்டிருக்கும் சோஷலிஸ்டுகளாயினும் சரி, இந்தக் கழகத்தின் வளர்ச்சியை எண்ணிப் பார்க்கவேண்டும். அவர்களுக்கெல்லாம் ஆச்சரியமாக இருக்காதா—சாமான்யர்களான நாம் சாதித்துள்ளவை எத்தனை எத்தனை என்று எண்ணிப் பார்த்தால்!

சிறிய ஒரு அணில் பெரிய ஒரு தென்னை மரத்தில் எப்படி ஏறுகிறது? — எப்படி ஏறுகிறது என்று கூறும்போது நான், அணில் ஏறிச் செல்லும் வேகத்தைத்தான் குறிப்பிடுகிறேன்!

“மற்றைய கட்சிகள் பனைமரம் என்றால் தி. மு. கழகம் முல்லைக் கொடி; நான், கழகத்தை முல்லைக் கொடி என்றழைப்பது, முல்லையின் மணத்திற்காக மட்டுமல்ல—அல்லது அது படர்ந்து விரிந்திருக்கும் கொடி என்பதினால் மட்டுமல்ல—அந்த முல்லைக் கொடியின் நறுமணம், கொடி அருகே நிற்கும், பனை மரத்தில் ஏறி பனங்கள் குடிக்க விரும்புபவரையும் தன் பக்கம் இழுக்கும்

(4-ம் பக்கம் பார்க்க)

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

கண்டேன் காமராசரை!

★

“தஞ்சையில் சொன்னேன்—‘கணம் காமராசரை நான் கண்ணால் கண்டதுகூட இல்லை; படத்தில்தான் பார்த்திருக்கிறேன்’ என்று! ‘காமராசர் மந்திரிசபை ஆணா—பெண்ணா—அலியா—என்பது பொறுத்திருந்து பார்க்க வேண்டியது’ என்றும் சொன்னேன்! அது, அன்றைய தினம் வரை இருந்த நிலை! இன்றைய நிலை, நான் காமராசரைக் கண்டேன், இரு முறை!—அடக்கம் கருதி நான் காமராசரைப் பார்த்தேன் என்று சொல்கிறேன்! உண்மையில், இரு முறையும் காமராசர் என்னை வந்து கண்டார்! நான் இப்போது தெரிந்துகொண்டிருக்கிறேன்—காமராசர், பெண்ணுமல்ல; அலியுமல்ல; அல்லது பெண் வேடம் தரித்த ஆணுமல்ல—உண்மையிலேயே ஆண்தான் என்பதை!’

—வேலூர் மாநாட்டில் அண்ணாதுரை

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

நம் நாடு

சென்னை 28-6-54 திங்கள்

அகதிகளுக்கு ஏற்ற இடம்!

இந்தியத் தூதுவராக ஆஸ்திரேலியாவில் இருந்து வருகிற ஜெனரல் கரியப்பா அவர்கள், அங்குள்ள வெள்ளையர்களின் நிற வெறியை மிக மிக வன்மையாகக் கண்டித்திருக்கிறார். இந்திய சர்க்காரின் சார்பில் ஊழியராகச் சென்றிருக்கிற ஒருவர், தாம் ஊழியம் செய்யும் நாட்டில் உள்ள மக்களின் நடவடிக்கைகளை, இவ்வளவு வெளிப்படையாகக் குறை கூறித் தாக்கிப் பேசலாமா; அவ்வாறு பேசுவது, அந்த நாட்டின் உள்நாட்டு விவகாரத்தில் குறிப்பிட்ட ஒரு பிறநாட்டு சர்க்கார் சார்பில் குறுக்கிட்டதாகாதா; என்பன பற்றி எல்லாம் சிந்திக்க வேண்டிய பொறுப்பு, இரண்டு நாட்டின் அரசாங்கத்தையும் சார்ந்ததாகும். அவை குறித்து மற்றவர்கள் கவலை கொள்ளத் தேவையே இல்லை.

ஆஸ்திரேலிய வெள்ளையர் காட்டும் நிறவெறி, தென் ஆப்பிரிக்காவில் டாக்டர் மலான் காட்டும் நிறவெறியையோ அல்லது அமெரிக்க தென் பகுதியில் நீக்ரோக்களிடம் அமெரிக்க வெள்ளையர்கள் காட்டும் நிறவெறியையோ ஒத்ததாக, இப்பொழுது இல்லாமல் இருக்கலாம். ஆனால், அத்தகு சூழ்நிலை ஆஸ்திரேலியாவில் இனி ஏற்படாது எனச் சொல்வதற்குமில்லை.

ஆஸ்திரேலிய வெள்ளையரின் நிறவெறியைச் சுட்டிக் காட்டிய ஜெனரல் கரியப்பா, அந்த நிறவெறியின் காரணமாக ஆஸ்திரேலியாவின் விவசாயமும், தொழிலும் வளர்ச்சியடைவதற்கு வழி இல்லாமல் தேங்கிக் கிடக்கிறது என எடுத்துக் கூறி இருக்கிறார். அத்தேசத்திற்கு விவசாயத்திலும், தொழிலிலும் ஈடுபட்டு, நாட்டின் செல்வத்தை ஒன்றுக்குப் பலவாகக் குவிக்கத் தேவையான அளவு குடிவளம் அங்கு இல்லாததே காரணம் என விளக்கமுரைத்துமுள்ளார் தூதுவர்.

ஆஸ்திரேலியா ஒரு சிறு கண்டம். அங்கு நிலவளம் உண்டு; நீர்வளம் உண்டு. ஆனால், குடிவளம் மிக மிகக் குறைவு.

அவ்வாறு குறைவாக இருக்கும் குடி மக்களும் வெள்ளை நிறத்தவர்; பிரிட்டிஷ் மக்கள் பரம்பரையினர்.

அங்கு வெள்ளையர் குடியேறியதும் ஆஸ்திரேலியாவின் பழம்பெரும் குடிகளாக இருந்த மக்கள், சிறுகச் சிறுக வசதியற்றப் பகுதிகளுக்கு விரட்டியடிக்கப்பட்டு, நசித்துப் போயினர். எஞ்சியவர் மிஞ்சியவர் கொஞ்சம்; வெறும் காட்சிப் பொருளாக்கப்பட்டுக் கிடக்கின்றனர், எங்கேயோ காட்டில்; குன்றுகளில்; குன்றுகளின் சரிவுகளில்!

ஆஸ்திரேலியாவில், நிலப்பரப்பு உள்ள அளவிற்குக் குடி வளம் அறவே கிடையாது. பிறநாட்டவர்—கருப்பு நிறத்தவர்—அங்கு குடியேறியிருக்க முடியாது. 'நாகரீக' மிக்க வெள்ளையரின் 'ஜனநாயக' சட்டம், அந்த அளவு கடுமையாக இருக்கிறது; அன்னியரை உள்ளே வரவிடாமல் தடுத்து நிறுத்துகிறது.

பூமிக்கடியில் மறைந்து கிடக்கிறது, செம்பொன்னும் கரும்பொன்னும்; நிலத்தில் தேங்கிக் கிடக்கிறது, நவநவமான தானிய வகைகள்; மக்களின் கைபட்டால் நாட்டின் செல்வம் பெருக்கெடுக்கும்; மக்களின் வாழ்க்கைத் தரம் உயரும்.

மண்ணில் புதைந்து கிடக்கும் செல்வங்கள் மண்ணிலேயே பதுங்கிக் கிடக்கட்டும், அவைகளை வெளியில் எடுத்து வாழ்வை வளமாக்கிக்கொள்ள வெள்ளையர் நீங்கலாக வேறு நிறத்தவரின் துணையைக் கோரோம்; தாமாகக் கிடைத்தாலும் திரும்பிப் பாரோம், என, ஆஸ்திரேலிய வெள்ளையர் பிடிவாதம்—இல்லை—நிறவாதம் புரிகின்றனர்!

காமன்வெல்த் என்ற கூட்டுறவில், இந்தியா, பாகிஸ்தான், சிலோன் சேர்ந்திருப்பதுபோலவே, ஆஸ்திரேலியாவும் சேர்ந்து இருக்கிறது. ஒரே காமன்வெல்த்தில் இணைந்துள்ள நாடுகளில் ஒன்றான ஆஸ்திரேலியா, நிறவெறியை ஒப்புக்கொண்டு செயல்படுவது அறமா, அழகா என்று கேட்க பிரிட்டனுக்கும் வக்கு இல்லை; இந்தியா, பாகிஸ்தான் நாடுகளுக்கும் நெஞ்சுரம் இல்லை.

கேட்டால்தான் என்ன சொல்லப்போகிறது ஆஸ்திரேலியா? காமன்வெல்த் கூட்டுறவில்தானே தென் ஆப்பிரிக்காவும் உள்ளது; மலான் நிற வெறி தீவிரமாகக் கொண்டிருக்கிறதே அல்லாது துளியும் குறையவில்லையே; அதை மாற்றக் கையாலாகாதவர்கள் எங்களைக் கேட்பது என்ன நியாயம்—என ஆஸ்திரேலியா பதட்டமாகக் கேட்டு விடலாம், அதற்கு என்ன சொல்வது தாம் என்று, பிரிட்டனும், ஆஸ்திரேலியாவின் நிறவெறியைத் தட்டிக் கேட்க முன்வராது இருக்கிறது போலும்!

சொந்த சுகம் கெட்டாலும் சரி, நிற வேற்றுமை பாராட்டுவதை மட்டும் விடமாட்டேன், என ஆஸ்திரேலியா நடந்து கொள்வது ஜெனரல் கரியப்பாவின் கண்ணையும் கருத்தையும் உறுத்தியிருக்கிறது. உள்ளக் கொதிப்பை மூடி மறைக்க முடியாமல், வெள்ளையர் நிற வெறியை, காரசாரமாகக் கடிந்து கூறி விட்டார். இன்மை முதற்தாம் பெற்ற பதவி பயிற்சி, அந்தப் பணியை அவருக்குக் கொடுத்திருக்கிறது போலும்! பாராட்டுகின்றோம் அவரை!

ஆஸ்திரேலியாவின் வெளிநாட்டு விவகார அமைச்சர் கேசி, இந்தியப் பிரதமர் பண்டிதரின் ஆப்த நண்பர். முன்னாள் வங்காள கவர்னராகப் பணி புரிந்தவராகவும் கேசி இருக்கிறார்.

இந்தியத் துணைக் கண்டத்திலே மக்கள் தொகை அதிகம். மேலும் மக்கள் தொகை அதிகரித்துவிடுமே என்ற அச்சம் இருக்கிறது பண்டிதர் சர்க்காருக்கு! அதற்காக, மக்கள் தொகையை மட்டுப்படுத்தக் கட்டுப்படுத்த 'குடும்ப திட்டம்' தீட்டிவருகிறது இந்திய சர்க்கார்.

இந்தியத் துணைக் கண்டத்திலேயே பிறந்து வளர்ந்த மக்கள் பெருக்கம் ஒரு பக்கம் இருக்க, பாகிஸ்தானிலிருந்து விரட்டப்பட்டு இங்கு தஞ்சம் புகுந்த அகதிகள் வேறு மக்கள் தொகையைக் கூட்டியுள்ளனர். அவ்வகதிகளைக் குடியேற்றுவதற்காக செலவிடப்படும் தொகையோ கோடி கோடி ரூபாய் ஆகிறது என்றபோதிலும், அவர்கள் கொடுக்கும் தொல்லைகளை சமாளிப்பதே இந்திய சர்க்காருக்குப் பெரும் பாரமாக உள்ளது.

இங்கு வேகமாக வளர்ந்து வரும் மக்கள் தொகையைக் குறைக்கவும், அகதிகளுக்குச் செலவாகும் தொகையில் மிச்சம் காணவும், அவர்கள் தரும் தொல்லைகளிலிருந்து மீளவும், அவர்களை ஆஸ்திரேலியாவில் குடியேற்ற பண்டிதர் முன்வர வேண்டும். அங்கே வாழ, அவர்களுக்கு ஏராளமான இயற்கை வசதிகள் இருக்கின்றன.

பண்டிதர் முயன்றால் ஆஸ்திரேலிய அரசாங்கம், பண்டிதரின் கோரிக்கைக்கு செவிசாய்க்காமல் போகாது. ஜெனரல் கரியப்பா இந்தியத் தூதுவராக ஆஸ்திரேலியாவில் இருக்கும் காலத்திலேயே, அகதிகளை அங்கு குடியேற்ற நேரு பண்டிதர் முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும்.

ஜாதி கர்வம் பிடித்துள்ள அகதிகளுக்கு, நிறவெறி பிடித்த ஆஸ்திரேலிய வெள்ளையர்களோடு நெருங்கிய தொடர்பு ஏற்பட வசதி செய்வதால், இரு சாராரிடத்திலும் உள்ள ஆணவமும், பிடிவாத புத்தியும் தொலைய வழி ஏற்படும், எனவே, அகதிகள் குடியேறுவதற்கான இடம் ஆஸ்திரேலியாவேயாகும்.

கோரிக்கை

இந்தியாவுக்கு வெளியே ஏற்றுமதி செய்யப்பட்ட 'ரெடிமேட்' துணிகளின் மீது வசூலிக்கப்பட்ட வரியைத் திருப்பித் தருமாறு தென்இந்திய வர்த்தக சபை இந்திய சர்க்காரைக் கேட்டுக் கொண்டிருக்கிறது.

வேலை நிறுத்தம் கூடாது

விமானத் தொழிற்சாலையில் வேலை நிறுத்தமே செய்யக் கூடாது என்று பார்லிமென்ட் உறுப்பினர் வே. அனந்தநம்பியார் பெங்களூர் விமானத் தொழிற்சாலை, தொழிலாளர் கூட்டத்தில் பேசுகையில் கூறினார்.

சந்திப்பர்!

பிரிட்டிஷ் அமைச்சர் ஈடனும், பண்டித நேருவும் சந்தித்துப் பேசலாம் எனத் தெரிகிறது.

பஞ்சாயத்துகள்—
ஜனநாயகத்தின் அஸ்திவாரம்

அதிக அதிகாரமும், நிதி மூலமும் அளிக்கப்பட வேண்டும்

சிம்லா பஞ்சாயத்து மாநாட்டில் அமிருத கௌரி, மாவ்லங்கர் பேச்சு

"இப்போதுள்ள உள்ளாட்சி மன்றங்கள் பொது ஜன சேவகர்களைக் கவர்ச்சிக்கத் தவறிவிட்டன; இதற்கு முக்கிய காரணம், ஜாதி கோஷ்டி மனப்பான்மைகளேயாகும்,"

இவ்வாறு, சிம்லாவில் ராஜ்ய ஸ்தல ஸ்தாபன அமைச்சர்கள் மாநாட்டில் தலைமை வகித்துப் பேசுகையில் ராஜ்குமாரி அமிருத கௌரி கூறினார்.

"வெற்றிகரமான ஒரு ஜனநாயக அமைப்பை நிர்மாணிக்க கிராம பஞ்சாயத்துக்கள், சுய ஆட்சி உறுப்புகள் திறமையாகச் செயல்படுவது இன்றியமையாதது; பலமான அஸ்திவாரம் இல்லாவிட்டால் ஜனநாயகம் வெற்றியடைய முடியாது; எனவே, அஸ்திவாரத்தைப் பலப்படுத்தி கட்டிடத்தை மேல் எழுப்பவேண்டும்," என்று அமிருத கௌரி மேலும் கூறினார்.

தொடர்ந்து பேசுகையில் "பஞ்சாயத்துகள் சுய ஆட்சி உறுப்புகளாகத் திறமையுடன் செயல்படுவதன் மூலம், கிராம மக்களுக்கு அவர்களது சொந்த விவகாரங்களை நிர்வகிப்பதில் அதிக சுதந்திரமும், சுயேச்சையும் பொறுப்பும் அளிப்பதற்கு தேசம் முழுமைக்கும் ஒரே மாதிரியான திட்டத்தை நாம் வகுக்க முடியுமானால் நிச்சயமாக வெற்றிகரமான ஜனநாயகக் கட்டுக்கோப்பை நிர்மாணிப்பதில் சேவை செய்தவர்களாவோம்," என்றார்.

மாநாட்டைத் துவக்கிப் பேசிய மாவ்லங்கர் கூறியதாவது:—

"ஸ்தல ஸ்தாபனங்களுக்கு அதிக அதிகாரங்களை அளிப்பதனால், மாகாண ராஜ்ய சர்க்கார்களின் வருவாய் மூலமே விநியோகிக்கவேண்டி வரும்; சட்டம், அமைதி பராமரிப்பு சம்பந்தமாகக் கிரிமினல் சட்டத்தில் கண்டுள்ள ஏராளமான சாதாரண விஷயங்களை பஞ்சாயத்துக்களிடம் ஒப்படைக்கலாம்; ஊர் பொது உபயோக வேலைகளான பள்ளி கட்டுதல், ரஸ்தாக்கள் போடுதல் போன்றவையும் ஸ்தல ஸ்தாபனங்களின் பொறுப்பாகவே இருக்கவேண்டும்.

சுய ஆட்சி உணர்ச்சியையும், பழக்கத்தையும், ஏற்படுத்தும் லட்சியம் கைகூட வேண்டுமாயின் தற்போது வழக்கத்திலுள்ள ஸ்தல ஸ்தாபன முறை பூரணமாக மாற்றியமைக்கப்பட வேண்டுமென்றார்.

செயல் மூலம் ஒவ்வொரு பிரஜையும், சுய திறமையை வெளியிட வாய்ப்பளிக்கும் மனப்பான்மை கொண்ட புதிய அஸ்திவாரத்தின் மீது ஸ்தல ஸ்தாபனங்கள் மறு நிர்மாணம் செய்யப்பட வேண்டும்; ஸ்தல சுய ஆட்சியானது ராஜ்ய, மத்திய சர்க்கார்களின் அஸ்திவாரம் என்று கருத வேண்டும்."

ஸ்தல ஸ்தாபனங்களின் நிதி பற்றி மாவ்லங்கர் கூறியதாவது:

"ஆட்சி முறையின் அடிப்படை உறுப்புகள் பஞ்சாயத்துகள்தாம் என்ற கருத்து ஒப்புக்கொள்ளப்பட்டால்—ஒப்புக் கொள்ளப்படுமென்று நம்புகிறேன் — அவை நிறைவேற்ற வேண்டியிருக்கும் கடமைகள் பொறுப்புகளுக்கேற்ப அவற்றின் நிதிநிலைமையையும் சீர் செய்யப்படவேண்டுமென்பது இயற்கையே," என்றார்.

"இவ்விஷயத்தில் ஸ்தல ஸ்தாபனங்களுக்கு நிதி உதவுவது மத்திய, ராஜ்ய சர்க்கார்களின் கடமையே ஒழிய, காட்டும் சலுகை அல்ல," என்று மேலும் அவர் கூறினார்.

ஒருவரைக் கொல்ல 50,000 குண்டுகள்

கொரிய யுத்தத்தில், ஒரு சீன சிப்பாயைக் கொல்வதற்கு அமெரிக்க சிப்பாய்கள் 50,000 ரவுண்டு தோட்டாக்களை உபயோகித்துள்ளனராம்.

அமெரிக்க உள்நாட்டு யுத்தத்தின் போது, 'சிக்கமாக்வா'ச் சண்டையில் ஒரு வடக்கத்தியானைக் கொல்ல அமெரிக்க சிப்பாய்கள் 208 ரவுண்டுகள் மட்டுமே சுட்டிருக்கிறார்கள். இத்தனைக்கும் அந்தக் காலத்தைக் காட்டிலும் இந்தக் காலத்தில், ஆயுதங்கள் எவ்வளவோ விஞ்ஞான ரீதியாக, இயந்திர சாதனங்களுடன் இயக்கப்படும் முறையில் வளர்ந்துள்ளன.

கொரிய யுத்தத்தில் அமெரிக்க சிப்பாய்கள் இத்தனை ரவுண்டுகள் செலவு செய்ததற்குக் காரணம், கொரியாவில், அநேகமாக எல்லா நாட்களிலும் இரவிலேயே சண்டை நடந்திருக்கிறது என்பதுதான் என்று சொல்லப்படுகிறது.

விலகினார்

சீர்காழி தாலுகா பச்சமராணம் பகுதியைச் சேர்ந்த அரசமங்கலம் கிராமத்தில் 18 கிராம கம்யூனிஸ்ட் கிசான் தலைவராகிய குப்புசாமி படையாச்சி என்பவர் கம்யூனிஸ்டு கட்சியினின்றும் விலகி விட்டார் என்று தெரிகிறது.

லஞ்ச ஊழல்

குறைவாக வாகன்கள் சப்ளை செய்யப்படுவதே ரயில்வேயில் லஞ்ச ஊழலுக்குக் காரணம் என்று ரயில்வே லஞ்ச விசாரணைக் குழுவிடம் இந்திய வர்த்தக சங்கம் தெரிவித்தது.

தமிழ் வகுப்புகள்

கர்னூல் போலீஸ் பள்ளியில் முதல் பாரத்திலிருந்து ஆறாவது பாரம் வரையில் தமிழ் வகுப்புகளை ஆரம்பிக்க ஆந்திர சர்க்கார் உத்தரவிட்டிருக்கிறது. கர்னூலில் உள்ள தமிழ் அதிகாரிகளின் குழந்தைகள் படிக்கவே இந்த ஏற்பாடு.

கருத்து வேற்றுமை

ஆந்திர ராஜ்யப் பிரிவினையை ஒட்டி சொத்துப் பிரிவினையில் சென்னை சர்க்காருக்கும், ஆந்திர சர்க்காருக்கும் மிடையே தீர்க்க முடியாத கருத்து வேற்றுமை ஏற்பட்டிருக்கிறதாம். இந்திய ஜனாதிபதியின் தலையீடு கோரப்படலாம் என்று தெரிகிறது.

தொழிற் சிக்கனத்தை எதிர்த்து ஆலைத் தொழிலாளர் போர்க்கோலம்!

400 பேர் சிறைப்படவும் தயார்

கான்பூர், ஜூன் 26—

கான்பூரில் உள்ள ஏழு நெசவாலைகளில், நவீன இயந்திரத் துணையுடன் தொழிற்சிக்கனத்தைக் கையாளுவதை எதிர்த்து முறியடிக்க 400-க்கும் அதிகமான ஆலைத் தொழிலாளர்கள், தாங்கள் சிறைப்படுவதற்கும் தயாராயிருப்பதாக உறுதி பூண்டுள்ளனர்.

கம்யூனிஸ்ட் அல்லாத எல்லாத் தொழில் சங்கங்களின் பிரதிநிதிகளும் ஒன்றுகூடி 'எல்லா கூடிய முயற்சிகளாலும்' தொழிற் சிக்கனத்தை எதிர்க்க முடிவு செய்துள்ளனர் எனவும் தெரிகிறது.

பொதுவுடைமைவாதி தனியுடைமை காணும் போக்கு!

ஜீவாவின் கம்பர் பஜனை குட்டு அம்பலம்!

சீர்திருத்த பாதையைச் செப்பனிடவாரீர்!

ஈழத்தடிகள் அன்பழைப்பு

ஜுன் 26-ந் தேதியன்று நடைபெற்ற வடார்க்காடு மாவட்ட சமூக சீர்திருத்த மாநாட்டிற்குத் தலைமையேற்று முன்னுரையாற்றுகையில், திரு ஈழத்தடிகள், சமுதாயத்திலுள்ள குறைபாடுகள் நீக்கப்பட்டாலன்றி நல்லதொரு அரசியலைக் காண முடியாதென்றும், மதம்-கடவுள் என்பவற்றின் பேரால் புகுத்தப்பட்ட இயற்கைக்கு மாறான கொள்கைகள்தான் சமூகத்தின் இழிநிலைக்குக் காரணமென்றும் குறிப்பிட்டார். அச்சொற்பொழிவின் முதல் பகுதி முந்திய இதழில் வெளிவந்துள்ளது; இரண்டாவது பகுதி இன்று தரப்படுகிறது:—

அண்மையில் காரைக்குடியில், கம்பன் விழா நடைபெற்றது. அதில், நம் நாட்டுப் பொதுவுடைமைவாதி ஒருவரும் கலந்து கொண்டார். அப்படிக் கலந்து கொண்டவர், கம்பனைப்பற்றி ஏதாவது பேசிவிட்டுப் போயிருந்தால், நாம் கவலைப்படமாட்டோம். அசல் மதப் பிரசங்கி போலப் பேசியிருப்பதுதான், அவரைப்பற்றி சிறிது பேச வேண்டி நேரிட்டுவிட்டது

ஷேக்ஸ்பியரிலிருந்து ஷா வரை உலகத்திலுள்ள எந்த அறிஞனும் கம்பனுக்கு ஈடாகார் என்ற முறையில் பேசித் தீர்த்துவிட்டார். கம்பனைப் புகழ வந்த அவசரத்தில் சகலத்திலும், சமத்துவம் காணும் இந்தப் பொதுவுடைமைவாதி, கம்பனுக்குத் தனியுடைமை கண்ட போக்கு கேலிக்கூத்தாகவே இருக்கிறது. கம்ப ராமாயணத்தில் பேசப்படும் இராமன், 'மனித வர்க்கத்தின் இன்பத்திற்காக தன்னையே சர்வசங்க பரித்தியாகம் செய்யும் குணவானாக அமைந்திருந்தான்' என்று பேசியிருக்கிறார்.

இராமனால் விடுதலை அடைந்த மனித வர்க்கம் எது என்பதை இவர் விளக்கவில்லை. எந்தவிதமான இன்பத்தை இராமனால் விடுதலையடைந்த மனித வர்க்கம் நுகர்ந்தது என்பதற்கும் விளக்கம் தரவில்லை. மேடையதிரப் பேசி காது செவிடுபடக் கை தட்டலைப் பெற்றதைத் தவிர, இப்படிப்பட்ட பேச்சினால், பேசியவரோ கேட்டவர்களோ அடைந்த பயன் யாதோ? மனித வர்க்கத்தின் விடுதலைக்காகவே இராமன் பாடுபட்டான் என்பதற்குச் சான்றாக, கம்ப இராமாயணத்திலும் சரி, வால்மீகி இராமாயணத்திலும் சரி, ஒரு வரி கூட எடுத்துக்காட்ட முடியாது என்பதை நான் உறுதியாகக் கூறுகிறேன்.

இன்னும் இந்தப் பொதுவுடைமைவாதி கம்பனைப்பற்றியும் இராமனைப்பற்றியும் பேசியுள்ள புகழுரைகளை எல்லாம் எடுத்து விளக்கப்போனால், இந்தக் குறுகிய காலம் அதற்கு இடந்தராது

எனவே, இன்னும் ஒரு நிகழ்ச்சியை மட்டும் குறிப்பிட விரும்புகிறேன்

மனித வர்க்கத்தின் விடுதலைக்காகப் பாடுபட்ட இராமனைப் பாடிய கம்பன், ஏழைப் பாட்டாளி மக்கள் சார்பிலே நின்று பணியாற்றியிருக்கிறான் என்ற உதாரணம் காட்டி அவர் ஒரு பாடலைக் குறிப்பிட்டிருக்கிறார்:—

"மேழி பிடிக்குங்கை
வேல்வேந்தர் நோக்குங்கை
ஆழி தரித்தே அருளுங்கை
—சூழ்வினையை
நீக்குங்கை என்றும்
நிலைக்குங்கை நீழி
காக்குங்கை காராளர் கை"

என்று ஏர் பிடித்து உழும் உழவர் பெருமக்களை ஏற்றி போற்றிப் பாடியிருக்கிறான் என்று கூறிவிட்டு, அந்த உழவர் பெரு மக்களைப் பற்றி மேலும் உயர்வாகப் பாடியதாக மற்றொரு பாடலையும் எடுத்துக் கூறினார் அவர். என்ன காரணத்தாலோ பாடல் முழுவதையும் கூறாமல், பாடலின் கடைசி வரியின் இரண்டு வார்த்தைகளை மட்டும் உச்சரித்துவிட்டு நிறுத்திக் கொண்டார் உழவர் பெருமக்களின் பெருமையைக் குறித்து கம்பர் பாடியதாகக் கூறப்படும் இரண்டு பாடல்களில் ஒன்றை முழுவதும் சொல்லிவிட்டு, மற்றொரு பாடலை ஏன் அரைகுறையாகச் சொன்னார். நேரமில்லையா? பத்திரிகையில் போட இடமில்லையா காரணம் என்ன?

காரணம் கூறுவதாக இருந்தால், இந்த இரண்டு காரணங்களைத் தவிர வேறெதுவும் கூற முடியாது கம்பன் பாடியிருக்கிறான் முழுப்பாடலையும்; ஆனால் கம்பனில் பொதுவுடைமை காண வந்த நண்பரால் முழுப் பாடலையும் கூற முடியவில்லை—தெரியாததால் அல்ல—கருத்துத் தெளிவில்லாததால்-இல்லை பால்! அந்தப் பாடல் முழுவதையும் பாடியிருந்தால் மேடையிலிருந்து எங்கே தன்னை விரட்டிவிடுவார்களோ என்ற அச்சம் அவரைத் தாக்கியதால்தான், பாடலை இரண்டு வார்த்தைகளோடு நிறுத்திக்கொள்ளும் நெருக்கடியான நிலைமைக்கு ஆளாகிவிட்டார்.

இதோ அந்தப் பாடல்:—

"செட்டி மக்கள் வாசல்வழி
செல்லோமே செக்காரப்
பொட்டிமக்கள் வாசல்வழி
போகோமே—முட்டிபுகும்
பார்ப்பா ரகத்தையெட்டிப்
பாரோமே எந்நாளும்
காப்பாரே வேளாளர் காண்,"

இந்தப் பாடல் முழுவதையும் ஏன் அவர் பாடவில்லை என்ற காரணத்தை இப்பொழுது நீங்கள் புரிந்து கொண்டிருப்பீர்கள் என்று நம்புகிறேன். உலகத் தொழிலாளிகளின் ஒற்றுமைக்காகப் பாடுபடும் இந்தப் பொதுவுடைமைவாதி, அதே உலகத்திலிருக்கும் செட்டியையும், செக்காரனையும், முட்டிபுகும் பார்ப்பானையும் ஏன் அந்தத் தொழிலாளரின் பட்டியலில் சேர்க்கவில்லை? ஒருவேளை அவருடைய சகாவான தோழர் இராமமூர்த்தி போன்றவர்கள் கோபிப்பார்களோ என்ற பயத்தால் போலும்! எப்படியோ போகட்டும்!—அது அவருடைய சொந்த விஷயம். ஆனால், பொதுவுடைமை பேசும் ஒருவர், இப்படித் தனியுடைமை பேசநேர்ந்தது குறித்துத்தான் இரண்டொரு வார்த்தைக் கூற நேர்ந்தது.

எனவேதான், புராண இதிகாசங்களில் சீர்திருத்தம் காண முயன்றால், நண்பர் ஜீவானந்தம் அடைந்த நிலையைத்தான் அனைவரும் அடைய நேரிடும்.

புராண இதிகாசப் பேச்சாளர்கள், எப்பொழுதுமே சந்தர்ப்பத்தையும் சூழ்நிலையையும் அனுசரித்துப் பேசி தப்பித்துக்கொள்ளும் ஒரு நிலைமைத்தான் உண்டாகும்.

ஆகவேதான், நாம் ஒரு புதுப் பாதையைக் கண்டுபிடித்துச் சமூக சீர்திருத்தத்தை கடந்த 30 ஆண்டுகளுக்கு மேலாகவே செய்து வருகிறோம். அந்தப் பாதைக்குத்தான் "பகுத்தறிவு" என்று பெயர்.

பகுத்தறிவு பொதுவாக எல்லோருக்கும் இருந்தபோதிலும், அதனைச் சீர்திருத்தம் என்ற துறைக்கு பாதையாக்கப் பலர் இன்னும் பயப்படுகிறார்கள்.

ஆனால், ஒரு குறிப்பிட்ட தொகையினராகிய நாம்தான், அந்தப் பாதையைச் செப்பனிட வேண்டியிருப்பதாலேயே சாக்ரடீஸ் காலத்திலிருந்த கஷ்டங்களும், சங்கடங்களும் இன்றும் நமக்கு இருப்பதாக நான் முன்னமே கூறிப்பிட்டேன்.

அந்தக் காலத்தைப் போன்ற கடுமையான சோதனைகளுக்கு நாம் ஆளாகவில்லை என்ற போதிலும், பகுத்தறிவுப் பாதையினைச் செப்பனிடு வதிலுள்ள கஷ்டங்களும், தொல்லைகளும் இக்காலத்துக்கேற்ற தண்டனையை நமக்குத் தராமலில்லை.

விஷக்கோப்பை நம் கையில் தரப்படவில்லை என்ற போதிலும் கல்லாலும், சொல்லாலும் நாம் தாக்கப்படாமலில்லை.

காலமும் கருத்தும் மாற மாற தண்டனையின் தரம்—அதாவது அளவு—மாறியிருக்கிறதே தவிர, இந்தத் துறையில் விசேஷமான மாறுதல் எதுவும் ஏற்படவில்லை என்றே கூறவேண்டும்; என்ற போதிலும் அந்தப் பணியை, விடாது நாம் செய்து வருகிறோம்,

கடவுள், மதம்பற்றி, நாம் ஏதாவது கருத்துக்களை வெளியிடும்போது, அவை ஏற்கனவே மதத்துக்கும் கடவுளுக்கும் வகுக்கப்பட்டுள்ள கருத்துகளுக்கு மாறுபட்டுக் காணப்பட்டால், உடனே நமக்கு நாத்திகம் பட்டம் சூட்டி விடுகிறார்களேயன்றி நாம் கூறுவதில் உண்மையிருக்கிறதா என்று அறியும் அவகாசத்தை அவர்கள் தங்கள் அறிவுக்கு அளிப்பதில்லை. இந்த அவகாசம் அளிக்கும் இயல்பை நம்மவர்களில் பெரும்பாலோர் பெற்றுவிட்டால், நம்முடைய பயணம் இன்றிருப்பதைவிட அதிதமாகவே நடைபெறும். அதுவரை பயணத்தை நிறுத்திவைக்காத சிறந்த பண்பை நாம் கைவிட்டுவிடக் கூடாது.

காலவட்டத்தில், நம்முடைய பாதையில் செல்வோரின் எண்ணிக்கை வளர்ந்து வருவதைக் காண்கிறோம்: மகிழ்ச்சியடைகிறோம். சில மாஜிப் பகுத்தறிவு வாதிகள் அவ்வப்போது செப்பனிடப்பட்ட நமது பாதையில் கல்லையும் மண்ணையும் போடப் பார்க்கிறார்களே ஒழிய, மதப் பற்றுடையோர் தொலைவில் நின்றுகொண்டு, பாதையை எப்படிச் செப்பனிடுகிறார்கள்—எவ்வளவு தொலைவு செப்பனிட்டுவிட்டார்கள்—நாமும் அந்தப் பாதையில் செல்லலாமா—என்று பார்க்கிறார்கள்.

அது மட்டுமல்ல; மதத்தின் பாதுகாவலனாகிய ஒரு புராணப் பிரசங்கியை எடுத்துக்கொள்ளுங்கள்—அவர், ஒரு புராணத்தைப் பற்றிப் பிரசங்கம் செய்யும் பொழுது, அதில் யாதாவதொரு சம்பவத்தைக் குறிப்பிடுகையில், 'இப்படியெல்லாம் நான்சொல்லவில்லை; புராணம் கூறுகிறது'—என்று கூறித் தப்பித்துக் கொள்ளும் கட்டத்துக்கு வந்திருக்கிறார். இது பகுத்தறிவுப் பாதையைச் செப்பனிடும்போது, நம்மால் கையாளப்படும் நேர்மையால் ஏற்பட்ட பலன் என்பதை யாரும் மறுக்க முடியாது.

கடவுளைப் பற்றியோ, மதத்தைப் பற்றியோ ஏதாவது நாம் கூற நேரிடும்போதெல்லாம், எவருடைய மனமும் இதனால் புண்படக் கூடாதென்பதைத்தான் முதலில் மனதில் நிறுத்தி பேசுகிறது எமது பண்பாகும்.

'மண்ணை வெட்டிக்கொண்டிருந்தவன், மண்ணுக்குள் மண்ணெண்ணெய் இருப்பதைக் கண்டுபிடித்தான்' என்பதுபோல் இன்ன காரியத்தை இதற்குமுன் செய்து கொண்டிருந்த கடவுள், இப்பொழுது இந்தக் காரியத்தையும் செய்தார் என்று ஒரு மதவாதி கூறுவாரானால், இப்பொழுது இந்த உலகத்தில் காணப்படும் உயிர்களும், பிறவும் இதற்குமுன் எங்கே இருந்தன—மண்ணுக்குள் மண்ணெண்ணெய் இருந்தது, மண்ணை வெட்டிய பிறகு தெரிந்தது—என்பதுபோல், கடவுளின் படைப்புக்குமுன் உயிர்களும், மரஞ் செடிகொடிகளும் எங்காவது ஓரிடத்தில் இருந்திருக்க வேண்டுமே!—என்று கேட்டால், அதில் என்ன தவறிருக்க முடியும்? இதனால் எவருடைய மனமாவது புண்படுமென்று கூறத்தான் முடியுமா?

சமூக சீர்திருத்த மாநாட்டிலே, கடவுளைப்பற்றி ஏன் இவ்வளவு தூரம் பேச வேண்டும் என்று சிலர் நினைக்கலாம். நான் ஏற்கனவே குறிப்பிட்டபடி, சமூக முன்னேற்றத்திற்குத் தடையாக உள்ளவை கடவுளும், மதமும்தான் என்பதை எந்தப் பகுத்தறிவு வாதியும் மறுக்க முடியாது.

கடவுளும் மதமும்தான் மனிதனின் தன்னம்பிக்கையை மாய்த்துவிட்டது.

'நீ உன்னை நம்பாதே—கடவுளை நம்பு' என்றுதான் மத நூல்கள் கூறுகின்றன. மத நூல் கூறும் இக் கோட்பாட்டினை ஒப்புக்கொண்டு, மனிதன் கடவுளை நம்ப என்று ஆரம்பித்தானோ அன்றைக்கே அவன் தன்னம்பிக்கையை இழந்து விட்டான்

இப்படி மனிதன் தன்னுடைய தன்னம்பிக்கையை இழந்த காரணத்தால்தான். அவன் இன்று எப்போதும் கைப்பிள்ளையாக இருக்கிறான்.

ஒருவன் மாடியில் வாழ்கிறான்; இன்னொருவன் தெருக்கோடியில் குடிசையில் வாழ்கிறான்—'ஏன் இந்த நிலை ஏற்பட்டது,' என்று எண்ணுகிற உரிமையை மதம் மனிதனுக்கு அளிக்கவில்லை!

[பின்னும் வரும்]

வெற்றிலைக்கொடிக்கால் தொழிலாளர்கள் துயரம்

தி. மு. க. தோழர்கள் முயற்சி

நடவடிக்கை எடுக்க எம். எல். ஏ.-க்கள் கோவிந்தசாமி, சுப்ரமணியம், ரங்கசாமி வேண்டுகோள்

பொத்தனூர், ஜூன் 25—வெற்றிலைத் தொழிலாளர் பிரச்னைக்கு முடிவு காண ஒரு மாபெரும் பொதுக்கூட்டம் தி மு கழக சார்பில் 15—6—54 மாலை தோழர் ஜி. பி சோமசுந்தரம் தலைமையில் திரு. வி. க. திடலில் நடைபெற்றது.

கூட்டத்திற்கு முன் தோழர்கள் ஜி. பி. சோமசுந்தரம், ஏ கோவிந்தசாமி, எம். எல். ஏ, பொன்னு ஆர். ரங்கசாமி, எம் எல். ஏ., எம். பி சுப்பிரமணியம் எம். எல் ஏ. ஆகியோர் நலிந்துபோன வெற்றிலைக் கொடிக் கால்களைப் பார்வையிட்டும், வெற்றிலைத் தொழிலாளர்களுக்கு ஆறுதல் கூறியும் வந்தனர்.

தலைவர் முன்னுரைக்குப் பின் தோழர் இரா. சநாதன் அவர்களால் தீர்மானங்கள் கொண்டு வரப்பட்டு ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

தோழர் இரா. சண்முகம், பி ஏ, பேசுகையில், வெற்றிலைத் தொழிலாளர் பிரச்னை திராவிட முன்னேற்றக் கழகம் கடந்த மூன்றாண்டு காலமாகவே ஈடுபட்டுள்ளது என்றும், வெற்றிலைத் தொழில் பாதிக்கப்படு முன் சுமார் பத்தாயிரமாகயிருந்த பொத்தனூர் மக்கள் தொகை இப்பொழுது ஆறாயிரமாகக் குறைந்துவிட்டதெனறும் நாலாயிரம் பேர் வெளியூர் சென்று கூலி வேலை செய்தும், பிச்சை யெடுத்தும் பிழைப்பு நடத்துகிறார்கள் என்றும், வெற்றிலைத் தொழிலாளி மற்றொரு வெற்றிலைத் தொழிலாளியிடம் பிச்சை கேட்கும் கொடுமையைக் காண வேண்டியுள்ளது என்றும் இக்கொடுமைகளைக் களைய எல்லோரும் வெற்றிலைத் தொழிலாளர் சங்கத்தில் சேர்ந்து போராட வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்.

பின்னர் தோழர் இ. ஆர். கிருஷ்ணன் பேசுகையில், நைந்திருந்த தொழிலாளர் பிரச்னை தீர தி. மு கழகம் நல்ல முறையில் ஈடுபட்டதென்பதை விளக்கமாகக் கூறினார்.

பொத்தனூர் வாசிகளால் சட்டசபை உறுப்பினர்களை வரவேற்கும்முறையில் தோழர் ந. மருதன் வரவேற்பிதழ் படித்தார்.

தோழர் பொன்னுரங்கசாமி எம். எல். ஏ, பேசுகையில், விவசாய அதிகாரிகள் காரில் வந்து வெற்றிலைக் கொடிக்கால்களை மேலாகப் பார்த்துவிட்டதாலேயே தோரிக்கைகளைக் கவனித்ததாக ஆகாது என்றும், வெற்றிலைக்கு ஏற்பட்டுள்ள தொத்து நோயைத் தடுக்கவும், போக்கவும் அரசாங்கமே தன்

(4-ம் பக்கம் பார்க்க)

தி.மு.கழகம் முல்லைக் கொடி

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

ஆற்றல் உடையது என்பதால்தான்!

'இந்த முல்லை மணம் சிலருக்கு வாடையாயிருக்கிறது; அவர்கள் எல்லாம் முல்லையை நுகரச் செய்யப்பட்டால், அவர்கள் அறிய முடியும்—அது வாடை அல்ல—நறுமணம் என்பதை!

"அந்த முல்லையின் மணங்கண்டு மயங்கி, நாகப் பாம்புகளும் கொடிமருகில் வரலாம்—நுழையக் கூடும் கொடிக்காலில்! மணம் வீசுவதால் மயங்கி, நாகப்பாம்பு வருகிறதே என நினைத்து, பாம்பிற்குப் பயந்து, கொடியையும் அறுத்துவிட முடியாது; அல்லது முல்லைக் கொடிக்கு வரும் நாகப்பாம்பையும் திடீரென அடித்துக் கொன்றுவிடவும் முடியாது. இந்தப் பணி இருக்கிறதே—முல்லைக் கொடியை கட்டிக் காப்பது மிகச் சிரமமான பணி, தோழர்களே—மிகவும் சிரமமான பணி!

"இன்று நாம் இங்கே அந்த முல்லை மலரின் மணத்தை மலர்ந்த முகத்தோடு, ஆணும் பெண்ணும் குழந்தைகளுமாகக் கூடி நுகர்ந்து அனுபவித்துக் கொண்டிருக்கிற இந்த மாநாடு நடக்கும் இந்த நேரத்திலேதான் டெல்லியில் பண்டித நேருவும், சீனப் பிரதமர் சௌ-என்-லாயும் பேசிக் கொண்டிருப்பர். இந்தியப் பிரதமர் என்ற முறையில் பண்டித நேரு பனை மரத்தின் உச்சியில் உட்கார்ந்திருப்பவர் அந்த உச்சி மரத்திலிருந்து இனியும் அவர் உயரே செல்ல முடியாதவர். அவர், உச்சியில்—உயரத்திலிருக்கிறோம் என்பதையும் மறந்து, ஆணவத்தால் நம்மை எல்லாம் வாய் சென்றவழி சென்று வசை பாடுகிறார். நாமும் அவருக்கு பதில் தரும் முறையில் வார்த்தைக்கு வார்த்தை பேச முடியாததால் அல்ல—அவரது ஆணவப் பேச்சை சகித்துக் கொண்டிருப்பது; ஆனால் அவர் உயரே இருக்கிறார்—இனியும் உயர முடியாத அளவுக்கு உச்சியிலே, வளர்ந்து நிற்கிறார்—இனி, அவர், தானாகவே அந்த உயரத்திலிருந்து உருண்டு கீழே விழாமல் பார்த்துக் கொண்டால், அதுவே "ஆண்டவன் செய்த நன்மை" என்ற நிலையிலிருப்பவர்.

"தாத்தா ஒருவர் திண்ணையில் உட்கார்ந்துகொண்டு வீட்டுச் சிறுவர்களை அதட்டிப் பேசுவதுபோலவேதான், நேரு பண்டிதரும் பேசிக் கொண்டிருக்கிறார். தாத்தா தானே, எத்தனை நாட்களுக்குப் பேசப் போகிறார்; பேசிவிட்டுப் போகட்டும்—என்றுதான் நாமும் இருக்கிறோம்!

"நண்பர்கள் எண்ணிப்பார்க்க வேண்டும்—காங்கிரஸ் இந்த இந்தியத் துணைக் கண்டம் முழுவதையும் ஆண்டு கொண்டிருக்கிற ஒரு பெரும் கட்சி; அதன் தலைவர் பண்டிதர்; நாமோ, வளர்ந்து கொண்டிருப்பவர்கள்—இன்னமும் வளர வேண்டியவர்கள்!

"காங்கிரசின் மிகப் பெரிய தன்மை கண்டு நாம் ஆச்சரியப்படவில்லை—ஆயாசப்படவில்லை; ஆனால், அவ்வளவு பெரிய காங்கிரசை, அதன் ஏகாதிபத்திய ஆட்சியை சாதாரணமானவர்களான நாம்—வளர்ந்துகொண்டிருப்பவர்களான நாம், எதிர்க்கிறோம் என்றால், அதிலேதான் ஆச்சரியமிருக்கிறது!

"நேரு நம்மையெல்லாம் பைத்தியக்காரர்கள் என்று நம்மைச் சொன்னபோது நான் கோபங் கொள்ளவில்லை; மாறாக மகிழ்ந்தேன். காரணமில்லாமல் இல்லை—அவர் நம்மைப் பைத்தியக்காரர்கள் என்று சொன்னதற்கு! 'என்னை ஆதரிப்பதாக இவர்கள் ஏன் சொல்லக்கூடாது; இவர்களுக்குத் தெரியாதா, இந்த நாட்டின் தலை எழுத்தை எழுதும் பேனா என் கையிலிருப்பது? என் நாவுக்கு எவ்வளவு வலிமை உண்டென்பது? ஆதரிக்கிறேன் என்றால் இவர்களில் சிலரை அமெரிக்காவுக்கும், ஆஸ்திரேலியாவுக்கும் தூதுவர்களாக அனுப்பமாட்டேனா? ஏன் இவர்கள் என்னை எதிர்ப்பதாகச் சொல்லிக்கொண்டிருக்க வேண்டும்? சுத்த பைத்தியக்காரர்களாயிருக்கிறார்களே!'—என்று எண்ணுமளவு அவர், நம்மை, 'பைத்தியக்காரர்கள்' என்று சொல்லியிருப்பார்?

"எதிர்ப்பவர்களிலே சிலருக்கு ஏதேனும் பதவி தந்து எதிர்ப்பை அடக்கிவிட நினைத்தவர்கள் ஏராளம்—வரலாற்றிலே!

"ரஷ்ய நாட்டிலே, மது விருந்தும், மாது தரிசனமும் தந்து மக்கள் குரலை ஒடுக்கிவிட நினைத்து ஏமாந்தான் ஜார் மன்னன்! மக்கள் தலைவர்கள், அந்த மன்னனின் மண்டபத்தையும் எட்டிப் பார்க்கக்கூட மறுத்துவிட்டனர்!

"அப்போது, 'மதுவையும், மாதையும் வெறுத்தோடும் பைத்தியங்கள் இருக்கின்றனவே' என்றெண்ணியிருப்பான் ஜார் மன்னன்! உரிமை வேண்டும் எனக் கோரும் இப்படியும் உள்ள சில 'பைத்தியங்கள்' உலகில் ஏராளம், ஏராளம்!

"பிரான்சு நாட்டிலும் மூண்டெழுந்த புரட்சித் தீயை, பூங்கொடியாளின் புன்னகையையும், அவள் பொற் கரங்கள் தரும் மதுவையும் தந்து அணைத்திட எண்ணியவர்கள் உண்டு! அவற்றை மதித்திடாத புரட்சி வீரர்கள்!!

"ஈரான் நாட்டு மொசாதிக்கைக் கூடத்தான் அமெரிக்காவும், பிரிட்டனும் பைத்தியம் என எண்ணுகின்றன.

"என்ன செய்வது? 'உரிமையே எனக்குப் பெரிதென்' றெண்ணிடும் இப்படியும் சில பைத்தியங்கள் உலகில் இருக்கத்தான் செய்கின்றன!

"அப்படித்தான் இந்த நேரு சுவாமி நமையெல்லாம் பைத்தியம் பிடித்திருப்பதாகச் சொல்கிறார். உண்மைதான் தோழர்களே! நமக்கு பைத்தியம் பிடித்திருக்கிறது—உரிமைப் பைத்தியம்—விடுதலைப் பித்து! பண்டிதர் உணர வேண்டும் இதை! நமது தாய் நாட்டுப் பற்றை, நமது விடுதலைக் கோரிக்கையின் நியாயத்தை, நல்ல மனிதர் பண்டிதர் உணர வேண்டுமென விரும்புகிறேன்!

"கழகத் தோழர்களே! உங்களுக்குச் சொல்கிறேன்—நேரு பண்டிதர் போன்றே அப்படியும் சிலர் நம்மைக் கண்டித்தால்தான், நம் நிலையை நாம் நன்குணர முடியும்!

"தாக்குபவர்களே! தடிகொண்டு எங்களைத் தாக்குங்கள்!! தூற்றுபவர்களே! உங்கள் 'காரியத்தை'ச் சரிவரச் செய்யுங்கள்!! அப்பொழுதுதான் நம்மை நாம் திருத்திக் கொள்ளவும், நம்மைப் பிறர் புரிந்து கொள்ளவும் இயலும்.

"கழகத் தோழர்கள் இந்தத் தாக்குதல்களையும், தூற்றுதல்களையும் பெரிதென எண்ணக்கூடாது; இவற்றிற்கு அஞ்சவும் கூடாது!

(பொதுச் செயலாளர் அண்ணாதுரை அவர்கள் பேச்சு முடியவில்லை—தொடர்ந்து வெளிவரும்.)

நேரு-சூ-என்-லாய் பேச்சு முடிவு

புதுடில்லி, ஜூன் 28—உலகப் பிரச்னைகள் பற்றியும் இந்தோ - சீனப் போர் பற்றியும் நேருவுக்கும் - சூ-யென்-லாய்க்குமிடையே நடைபெற்ற பேச்சு வார்த்தைகள் முடிவுற்றன. இரு நாட்டுப் பிரதமர்களும், மூன்று நாட்களிலும் ஐந்து தடவைகள் சந்தித்து 12 மணி நேரம் பேசினார்கள்.

கூட்டறிக்கை

நேரு-சூ-யென்-லாய் சந்திப்பு பற்றி இருவருடைய கூட்டறிக்கை எங்கு இன்று மாலை அதிகாரபூர்வமாய் வெளியிடப்படும் எனத் தெரிகிறது.

சீனப் பிரதமர் ஞாயிறு மாலை பத்திரிகை நிருபர்களிடம் பேசினார். தன்னிடம் முன்கூட்டியே கொடுக்கப்பட்ட 62 கேள்விகளில் ஐந்து கேள்விகளுக்கு மட்டுமே அவர் பதில் கூறினார்.

இரங்கூன் புறப்பாடு

இன்று சீனப் பிரதமர் இரங்கூனுக்குப் புறப்பட்டுச் சென்றார். இந்திய சர்க்கார் சார்பில் என். ஆர். பிள்ளை அவருடன் ரங்கூன் வரை சென்று அதே விமானத்தில் புதுடில்லி திரும்புவார்.

புது பள்ளிகள்

செங்கற்பட்டு மாவட்டத்தில் இந்த ஆண்டில் 7 உயர்தர எலிமெண்டரி பள்ளிகள் புதிதாக திறக்கப்படும் எனத் தெரிகிறது.

ஆசியல் மாநாடு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டும் ஏகமனதாக நிறைவேறின.

இந்தியாக பொதுச் செயலாளர் அண்ணாதுரை அவர்கள் சிறப்புரை சொற்பொழிவு நிகழ்த்தியதும் மாநாடு முடிவுற்றது.

அதற்கு முன் மாநாட்டுச் செயலாளர் தோழர் பொன்னுசாமி அவர்கள் நன்றி கூறினார்.

இரவு 10 மணிக்கு நாகேசன் நிரை நாடக மன்றத்தினரால் 'சந்திரமோகன்' நாடகம் நடைபெற்றது.

ஒரே ஒரு திருத்தம்!

☆

'காமராசருக்கு நாம் ஏதாவது எதிர்ப்புக் காட்ட வேண்டும் என்ற நினைப்பில்தானோ என்னவோ, 'தினத் தந்தி'யார், நாம் காமராசரை ஆதரிப்பதாகக்கூட எழுதுகிறார். எழுதட்டும், ஒரே ஒரு திருத்தத்துடன்— காமராசரை திராவிட இயக்கத்தவர் ஆதரிக்கின்றனர்'—என்ற முற்றுப்புள்ளி வைத்து விடுவதற்குப் பதிலாக—'காமராசரை திராவிட இயக்கத்தவர் ஆதரிக்கின்றனர்; பார்ப்பனர்கள் காமராசரை எதிர்க்கின்றனர்'—என்று எழுதுவதுடன், கீழே, 'காமராசரைப் பார்ப்பனர்கள் எதிர்த்தால், திராவிட இயக்கத்தவர் காமராசரை ஆதரிப்பார்கள்'—என்ற ஒரே ஒரு திருத்தத்துடன் 'தினத் தந்தி'யார் எழுதட்டும்."

—வேலூர் மாநாட்டில் அண்ணாதுரை

புரட்சிக் காதை! வீர வரலாறு!!

ஈ. வெ. கி. சம்பத் அவர்களின் முதல் கருத்தோவியம்

"முடி சாய்ந்தது"

விலை 1—4—0. விற்பனைக் கழிவு 25%.

கிடைக்குமிடம்:

நீலா நிலையம் :: 11-A, செரி ரோட் :: சேலம்.

வெற்றிலைக் கொடிக்கால்...

கழகக் கூட்டங்கள்

☆

தலைவாசல் நாயர்

பெரியகோயிலுக்கு எதிரில்

29—6—54 செவ்வாய் மாலை

தலைவர்: வி. பொன்னையன்

பேசுவோர்:

ஈ. வெ. கி. சம்பத்

எஸ். அப்பாவு

என். சிட்டப்பா

☆

கீழப்பாவூர்

30—6—54 புதன் மாலை

தலைவர்: அரு இராமநாதன்

பேசுவோர்:

எம். இரத்தினம்

இரா. சு. நடராசன்

கே. கே. சம்பந்தன் தந்தையானார்!

ஆச்சாரியார் குலதர்மக் கல்வித் திட்டத்தை எதிர்த்து அப்போர் மறியலில் ஈடுபட்டு, ஒரு திங்கள் சிறை சென்றவரும், பண்டித நேருவுக்கு கருப்புக் கொடி காட்டிய போது இரண்டு கைதியினின் போராட்டத்தில் திருவில்லிபுத்தூருக்கு அனுப்பப்பட்டவருமான செகின் தோழர் கே. கே. சம்பந்தன் அவர்கள் வாழ்க்கைத் துணைவியார் ரமணி அவர்கள் சென்ற 24—6—54 வியாழன் பிற்பகல் 2 மணிக்கு ஒரு ஆண் மகவைப் பெற்றெடுத்தார். தாயும் சேயும் நலமாக உள்ளனர்.

(3-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

கொள்முதல் செலவில் கொடிக்கால் நடத்த மருந்து வகைகளைத் தெளிக்க வரவேண்டும் என்றும், பொத்தனூரில் உயர்நிலைப் பள்ளி ஒன்று அரசாங்கம் ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்.

தோழர் எம். பி. சுப்பிரமணியம், எம்.எல்.ஏ., பேசுகையில், நாட்டில் நிலவுகின்ற நிலைகளைக் கண்டு தி. மு. கழகம் கவலைப்படுவதோடு மட்டுமின்றி நிவர்த்தி செய்யவும் முற்பட்டு வருகிறதென்றும், தானும் தோழர் ரங்கசாமி அவர்களும் அமைச்சர் பக்தவத்சலத்தைக் கண்டு வெற்றிலைத் தொழிலாளர் குறைபற்றி பேசியதையும் விளக்கினார். வெற்றிலை அழுகிவிடும் சாக்கைகளால், அதற்கு வரி விலக்குத் தரவேண்டுமெனக் கேட்டுக் கொண்டார். அவர், அரசாங்கத்தின் வரி விதிப்புக் கொள்கையைக் கண்டித்துப் பேசுகையில், மக்களிடம் வசூல் செய்யும் வரிகளை அவர்களுடைய நன்மைக்காக வகையாகச் செலவிட வேண்டுமென்று குறிப்பிட்டார். ஐந்தாண்டுத் திட்டத்தால் தென்னாட்டுக்கு நன்மையில்லை என்றும், வடநாடு நல்ல பயனை அடைகிறதென்றும் குறிப்பிட்டார்.

தோழர் ஏ. கோவிந்தசாமி எம். எல். ஏ., பேசுகையில், மந்திரிகள் மக்களின் குறைகளைக் கேட்கவும், நலிந்துபோன வெற்றிலைக் கொடிக்கால்களைப் பார்வையிடவும் வருவதில்லை என்றார். அரசாங்கக் கட்சியை விட எதிர்க்கட்சிதான் மக்களின் குறைகளை நன்கு கவனித்து பரிகாரந் தேட முற்படுகிறது என்றார். நாட்டின் பட்டினிச் சாவேற்பட்டு கிராம அதிகாரி குறிப்பிட்டு எழுதினால் அவர்களை டிஸ்மிஸ் செய்துவிடுகிறார்கள் எனக் குறிப்பிட்டார். வெற்றிலைத் தொழிலாளர்களின் நன்மையைக் கவனிக்க துணைக்குழு மூலம் ஆவன செய்வதாகவும் வாக்களித்தார்.

கூட்டத்தில், வெற்றிலைக் கொடிக்கால் நோயைப் போக்க ஆவன செய்யுமாறும், வெற்றிலை வியாபாரிகள் கமிஷன் வியாபாரிகளாக இருப்பதால், விற்பனை வரி விலக்கு அளிக்கப்பட வேண்டுமென்றும், இப்பிரச்னைகள் பற்றி ஆவன செய்யவும், சர்க்கார் அதிகாரிகளைக் காணவும் தோழர்கள் ஆர். இரங்கசாமி எம். எல். ஏ., மலை. சகநாதன், எம். பி. சுப்பிரமணியம், ஏ. கோவிந்தசாமி எம். எல். ஏ., வி. பி. சோமசுந்தரம், இரா. செழியன், இரா. சண்முகம் ஆகியோர் கொண்ட குழு ஒன்று அமைப்பதென்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

திராவிட முன்னேற்றக் கழகத் தக்கான தோழர் இரா. செழியன், எம். ஏ. அவர்களால், அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று (86, குள்ளகாரபவன செட்டித் தெரு, சென்னை) வெளியிடப்படுகிறது. ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை, எம். ஏ.